ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2160/28 - 2020 ජනවාරි මස 29 වැනි බදාදා - 2020.01.29

*2160/28 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 29 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 9/2016* (II)

**2015ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க, தேசியமருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபைச் சட்டம்**

*2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபைச் சட்டத்தின் 142 ஆம் பிரிவின் கீழ் சுகாதாரம் மற்றும் சுதேச மருத்துவ சேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

சட்டத்தரணி பவித்திரா வன்னிஆரச்சி (பா.உ.),
சுகாதாரம் மற்றும் சுதேச மருத்துவ
சேவைகள் அமைச்சர்.

கொழும்பு,
*2020, சனவரி 29.*

**ஒழுங்குவிதிகள்**

*1.* இவ்வொழுங்கு விதிகள் 2020ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, மருத்துவ உபகரணங்களுக்கு விலைகுறித்தல் ஒழுங்குவிதிகள் என எடுத்துக் காட்டப்படலாம்.

*2.* *(1)* ஆளெவரும், இதற்கான அட்டவணையின் நிரல் II இலுள்ள நேரொத்த பதிவுகளிற் குறித்துரைக்கப்பட்ட விலைகளிலும் பார்க்க உயர்வான விலைகளில் அவ்வட்டவணையின் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்ட எவையேனும் மருத்துவ உபகரணங்களை விற்பனை செய்தலாகாது அல்லது அவற்றுக்கான விதிப்பனவைச் செய்தலாகாது.

*(2)* அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட விலைகள், அட்டவணையின் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்ட மருத்துவ உபகரணங்களுக்கான அதிகபட்ச சில்லறை விலையாக இருத்தல் வேண்டும்:

1A - PG 4851 — 617 (2020/01)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

ஆயின், எவ்வாறாயினும், சர்வதேசக் குறிப்பீட்டு விலைகளினதும் மற்றும் வேறுகாரணிகளினதும் நியதிகளின்படி அட்டவணையின் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்ட மருத்துவ உபகரணங்களின் ஏலவேயுள்ள சந்தை விலையானது, அவ்வட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட அதிகபட்ச சில்லறை விலையிலும் பார்க்கக்குறைவாகவுள்ளவிடத்து, அத்தகைய மருத்துவ உபகரணங்கள் ஏதேனும் விலை அதிகரிப்பின்றி ஏலவேயுள்ள விலையில் விற்பனை செய்யப்படுதல் வேண்டும்.

3. இறக்குமதியாளர் அல்லது உற்பத்தியாளர், அட்டவணையின் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்ட மருத்துவ உபகரணங்களின் வர்த்தகப் பொதியின் மீது அல்லது அலகுகளின் மீதான சுட்டுத்துண்டின் மீது அவ்வட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட அதிகபட்ச சில்லறை விலைகளை வாசிக்கத்தக்க முறையில் அச்சிடுதல் வேண்டும் அல்லது அழிக்க முடியாத மையில் குறியிடுதல் வேண்டும்.

4. மூன்றாம் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், இறக்குமதியாளர் அல்லது உற்பத்தியாளர், இவ்வொழுங்கு விதிகள் வெளியிடப்படும் தேதியிலிருந்து மூன்று மாதகாலப் பகுதியொன்றினுள் அட்டவணையின் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்ட மருத்துவ உபகரணங்களின் ஏலவேயுள்ள கையிருப்பின் வர்த்தகப் பொதியின் மீது அல்லது அலகுகளின் மீது அதிகபட்ச சில்லறை விலையை அச்சிடுதல் வேண்டும் அல்லது குறியிடுதல் வேண்டும்.

5. அட்டவணையின் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் மருத்துவ உபகரணத்தை விற்பனை செய்கின்ற அல்லது அதற்கான விதிப்பனவைச் செய்கின்ற ஆளொருவர், தனிவேறான விடயமொன்றாக அத்தகைய மருத்துவ உபகரணத்தின் வணிகப் பெயருடனான அல்லது அன்றிய அங்கீகரிக்கப்பட்ட பெயர், மாதிரி, வகை, அளவு, பொதியளவு மற்றும் விலையைத் தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்ற பற்றுச்சீட்டொன்றை வழங்குதல் வேண்டும்.

6. அட்டவணையின் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் மருத்துவ உபகரணத்தை விற்பனை செய்கின்ற அல்லது அதற்கான விதிப்பனவைச் செய்கின்ற ஆளொவ்வொருவரும், அப்பொதியில் அல்லது துலாம்பரமானவோர் இடத்தில் அத்தகைய மருத்துவ உபகரணத்தின் அதிகபட்ச சில்லறை விலையை வெளிக்காட்டி வைத்தல் வேண்டும்.

7. அட்டவணையின் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்ட மருத்துவ உபகரணத்துக்கு ஒத்ததாகவுள்ள ஏதேனும் மருத்துவ உபகரணத்தின் ஏதேனும் வணிகப் பெயருடனான அல்லது அன்றிய அங்கீகரிக்கப்பட்டபெயர், மாதிரி, வகை, அளவு அல்லது பொதியளவு என்பவற்றின் அதிகபட்ச சில்லறை விலையொன்று அட்டவணையில் குறித்துரைக்கப்படாதவிடத்து, அத்தகைய மருத்துவ உபகரணத்தின் அதிகபட்ச சில்லறை விலையானது அவ்வட்டவணையின் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்ட மருத்துவ உபகரணத்தின் அதிகபட்ச சில்லறை விலையாக இருத்தல் வேண்டும்.

8. ஒரு மருத்துவ உபகரணத்தின் ஏதேனும் வணிகப் பெயருடனான அல்லது அன்றிய அங்கீகரிக்கப்பட்ட பெயர், மாதிரி, வகை, அளவு அல்லது பொதியளவு அட்டவணையிற் குறித்துரைக்கப்படாதவிடத்து, அவ்வாறு குறித்துரைக்கப்படாத மருத்துவ உபகரணத்தின் வணிக அல்லது அங்கீகரிக்கப்பட்ட பெயர், மாதிரி, வகை, அளவு அல்லது பொதியளவு என்பவற்றுக்கான அதிகபட்ச சில்லறை விலையானது, 2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபைச் சட்டத்தின் 118 ஆம் பிரிவின்கீழ் தீர்மானிக்கப்பட்ட அறிமுக விலையாக இருத்தல் வேண்டும்.

9. இவ்வொழுங்கு விதிகளின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றார்.

10. இவ்வொழுங்கு விதிகளில் -

"மருத்துவத் தொழிலர்" என்பது, (105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளை உடையதாதல் வேண்டும்;

"ஆள்" என்பது, கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத ஏதேனும் ஆட்கள் குழுவை உள்ளடக்கும்;

"தனியார் மருத்துவ நிறுவனம்" என்பது, 2006 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவு செய்தல்) சட்டத்திலுள்ளவாறான அதே பொருளை உடையதாதல் வேண்டும்.

**அட்டவணை**

(ஒழுங்குவிதி 2)

**தெரிவு செய்யப்பட்ட மருத்துவ உபகரணங்களின் அதிகபட்ச சில்லறை விலைகள்**

| இல. | நிரல் I | நிரல் II |
|---|---|---|
| | மருத்துவ உபகரணங்களின் அங்கீகரிக்கப்பட்ட பெயர் | ஓர் அலகுக்கான அதிகபட்சசில்லறை விலை (அசிவி) (இலங்கை ரூபாவில்) |
| 1. | கையாண்டு தீர்க்கப்பட வேண்டிய முகமூடி நெய்யப்படாதது (காதுக்கொளுவி வகை அல்லது கட்டப்படும் வகை) | 15.00 |
| 2. | கையாண்டு தீர்க்கப்பட வேண்டிய மருத்துவ முகமூடி நெய்யப்படாதது (காதுக்கொளுவி வகை அல்லது கட்டப்படும் வகை) | 15.00 |
| 3. | முகமூடி (N95 வகை துகள்சார் சுவாசக் கருவி) | 150.00 |

02-237

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.